07.04.2026 IP.No.3/2024

சாட்சி : PW 1 பத்மினி

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**10, 18 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. மனுவில் குறிப்பிட்டுள்ள முகவரி என் சொந்த வீடுதான் என்றால் சரிதான், 2010 ல் பாதி வீட்டையும், 2019 ல் மீதி வீட்டையும் விற்றுவிட்டோம். தற்போது மேற்படி முகவரியில் நான் வசித்து வருகிறேனா என்றால் இல்லை. அவ்வாறு வசித்து வராதபட்சத்தில் ஏன் அந்த முகவரியில் குடியிருப்பதாக என்னுடைய நிரூபணவாக்குமூலத்தில் பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் வழக்கு தாக்கல் செய்யும்போது நான் அங்கிருந்தேன். கடந்த வாய்தாவிற்கு நீதிமன்றத்திற்கு வந்தபோது நான் அந்த முகவரியில் இல்லையா என்றால் 2020 வரை மட்டும் தான் அந்த முகவரியில் இருந்தோம். என் மனுவில் நான் கடை ஆரம்பித்ததாக சொல்லியுள்ளது எந்த வருடம் என்றால் 2005 ம் வருடம் ஆகும். மேற்படி கடை ஆரம்பிப்பதற்கு முதலீட்டிற்கு நான் என்ன செய்தேன் என்றால் வெளியில் வட்டிக்கு வாங்கினேன்.

2. மனுவில் சொல்லியுள்ளது போல் எதிர்மனுதாரர்களுக்கு எல்லாம் நான் வட்டி செலுத்தியுள்ளேன் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ள நிலையில், 10 மற்றும் 18 ம் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வளவு வட்டி செலுத்தியுள்ளேன் என்றால் வாங்கிய அசலுக்கு மேல் 3, 4 மடங்கு கூடுதலாக வட்டி செலுத்தியுள்ளேன். நான் கூடுதலாக வட்டி செலுத்திவிட்டேன் என்று தற்போது கூறியுள்ள விபரத்தை என் மனுவில் எங்கேயாவது சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் கூடுதலாக எந்த வட்டியையும் செலுத்தவில்லை என்றும், அவ்வாறு செலுத்தாததால் தான் என் மனுவில் அதுகுறித்து குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் மனுவில் நானும் வெளியில் கடன் கொடுத்ததாக சொல்லியுள்ளது யார்யாருக்கு எவ்வளவு என்று சொன்னால் ஜவுளிதான் கொடுத்துள்ளோம், பணமாக கொடுக்கவில்லை. ஜவுளியாக யாருக்கு கொடுத்துள்ளோம், அதன் மதிப்பு என்னவென்றால் சுமார் ரூ.10 லட்சத்திற்குள் இருக்கும்.

3. மேற்கண்ட தொகை விபரத்தை ஏன் வழக்கில் குறிப்பிட்டு சொல்லாமல் மறைத்துள்ளோம் என்றால் துணிமணிகள் என்பதால் அதனை காண்பிக்கவில்லை. மேற்குறிப்பிட்ட ரூ.10 லட்சம் மதிப்பிற்கான தொகையையோ அல்லது துணிமணிகளையோ நாங்கள் திரும்ப வாங்க முயற்சி செய்தோமா என்றால் வாடிக்கையாளர்களிடம் கேட்டோம், நாங்கள் நொடிப்பு நிலை மனு கொடுத்ததால் அங்கு இல்லை, அதனால் திரும்ப கேட்க முடியவில்லை, நாங்கள் கடன் வாங்கிய நபர்கள் எங்களை டார்ச்சர் செய்ததால் நாங்கள் அங்கு இல்லை. நாங்கள் கடன் வாங்கிய நபர்கள் எங்களை தொந்தரவு செய்ததாக நான் சொல்லியுள்ள நிலையில், யார் தொந்தரவு செய்தார்கள், எப்போது தொந்தரவு செய்தார்கள் அது குறித்து நான் காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்துள்ளேனா என்றால் கொடுக்கவில்லை. குறிப்பாக 10 வது எதிர்மனுதாரும், 18 வது எதிர்மனுதாரரும் எந்தவித தொந்தரவும் செய்யவில்லை என்பதால் தான் அவர்கள் மீது நாங்கள் புகார் எதுவும் கொடுத்து நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

4. 2ம் மனுதாரரான என் கணவர் எப்போது விருப்ப ஓய்வு வாங்கினார் என்றால் 2020 ல் வாங்கினார். அந்த விருப்ப ஓய்வில் வந்த பணத்தை வைத்து எதிர்மனுதார்களுக்கு பணம் கொடுத்ததாக சொல்லியுள்ளதில் யார்யாருக்கு எவ்வளவு கொடுத்தோம் என்றால் அவர் சொசைட்டியில் வாங்கிய பணத்தை திரும்ப கொடுத்துவிட்டார், வாங்கிய எல்லாருக்கும் பணம் கொடுத்தோம். நாங்கள் எல்லா கடனையும் கொடுத்துவிட்டோமா என்றால் எல்லா கடனும் கொடுக்கவில்லை, மிகவும் கஷ்டத்தில் இருந்த நபர்களுக்கு பணத்தை கொடுத்தோம். 10 மற்றும் 18ம் எதிர்மனுதாரர்களுக்கு பணம் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை, அவர்களை விட மிகவும் கஷ்டப்படுகிறவர்களுக்கு பணம் கொடுத்தோம். எனக்கு துணிவியாபாரத்தின் மூலமாக வெளிநபர்களிடமிருந்து ரூ.10 லட்சம் மதிப்பிலான பணம் வரவேண்டியதாக நான் சொல்லியுள்ள நிலையில், யார்யாரிடமிருந்து எவ்வளவு தொகை வரவேண்டியுள்ளது என்று என் மனுவிலோ, நிரூபணவாக்குமூலத்திலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். (பின்னர் சாட்சி ஞாபகம் இல்லை என்று கூறினார்).

5. நான் மனுவில் சொல்லியுள்ள முகவரியில் தற்போது நான் குடியிருந்து வரவில்லை என்று நான் கூறுவதால் என் மனு தள்ளுபடிக்குரியத்தக்கது என்று

சொன்னால் சரியல்ல, அங்குதான் 2020 வரை குடியிருந்து வந்தோம்.நாங்கள் குடியிருந்து வந்த வீட்டை விற்பனை செய்த விபரத்தையும் என் மனுவில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்பதால் என் மனு தள்ளுபடிக்குரியத்தக்கது என்றால் சரியல்ல, எங்கள் மனுவிலேயே எந்த சொத்தும் இல்லை என்றுதான் சொல்லியுள்ளோம். நாங்கள் வாங்கிய கடனை திருப்பி செலுத்துவதற்கு எங்களுக்கு வசதி வாய்ப்பு உள்ளது என்றும், அதனை நாங்கள் மனுவில் மறைத்து மனு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல, அவ்வாறு வசதி வாய்ப்பு இல்லை என்றுதான் சொல்லியுள்ளோம். நாங்கள் உண்மைக்கு புறம்பான தகவல்கள் கூறி மனு தாக்கல் செய்துள்ளதால் மனு பரிகாரம் எங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்). திருமதி.P.கலை, நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.